2010 ஏப்ரல் 21]

எனவே, வீரபாண்டிய கட்டபொம்மனுடைய புகழைப் பறைசாற்றும் வகையில் உடனே அவற்றைக் கட்டித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களாக இருந்தாலும், மொழிப் போர் வீரர்களாக இருந்தாலும் அவர்களையெல்லாம் மதிக்கிற அளவில், கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் தியாகிகள் பென்ஷன் என்று வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டபொம்மன் சிலையைப் பராமரிப்பதைப்போல, நிச்சயமாக வருங்காலத்தில் அவருடைய நினைவு தினமான அக்டோபர் 16 ஆம் தேதியன்று பஸ் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல் அந்தப் பகுதிகளில் வசதி வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தற்போதைக்கு அங்குப் போதுமான இட வசதி இல்லை என்று சொல்வதால், அங்கு அரசு நிலங்கள் இருக்கின்றனவா என்பதையும் கண்டறிந்து, வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்பப் பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

மாணவர் விடுதி

***90751—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி, ஆலப்பட்டி, குருபரபள்ளி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

[2010 ஏப்ரல் 21

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடை அளிக்கிறேன்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால், புதிதாக அங்கு விடுதி கட்ட அவசியம் எழவில்லை. ஆலப்பட்டி மற்றும் குருபரபள்ளி ஆகிய பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியினுடைய முக்கிய பகுதிகளான வேப்பனப்பள்ளி, குருபரபள்ளி, ஆலப்பட்டி ஆகிய பகுதிகளில் ஆலப்பட்டியிலும், குருபரபள்ளியிலும் இதுவரையிலே அரசு மாணவர் விடுதிகள் இல்லாத காரணத்தினால், அந்த இரண்டு பகுதிகளிலும் அரசு மாணவர் விடுதிகளைப் புதிதாக உருவாக்கித் தர வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டிருந்தேன். அதுமட்டுமல்லாமல், வேப்பனப்பள்ளி, கர்நாடக, ஆந்திர எல்லையை ஒட்டி இருக்கக்கூடிய ஒரு பகுதி; அந்தப் பகுதியில் அரசு மாணவர் விடுதி ஏற்கெனவே ஒன்று இருக்கிறது. ஏற்கெனவே இருந்த அந்த மாணவர் விடுதியிலிருந்து 3 ஆயிரம் மாணவ, மாணவிகள் அந்தப் பள்ளியிலே படித்துக்கொண்டிருந்தார்கள் என்ற அந்த நிலையை நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பள்ளியைப் பிரித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய உத்தரவை ஏற்று, அந்தப் பள்ளியைப் பிரித்து மாணவர்கள், மாணவிகளுக்கென்று தனியாக உருவாக்கி, அதற்கு 1½ கோடி ரூபாய் அளவிலே கட்டடத்தையும் கட்டித்

2010 ஏப்ரல் 21]

தந்து, இன்றைக்கு அது ஒரு பிரம்மாண்டமான பள்ளியாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, கர்நாடக, ஆந்திர எல்லையை ஒட்டி இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சுமார் 20-க்கும் மேற்பட்ட அந்த மாணவ, மாணவிகள் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், வேப்பனப்பள்ளிக்குதான் வந்து படிக்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டம், கல்வியிலே மிகவும் பின்தங்கிய பகுதி என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 71 சதவிகிதம் ஆண்கள் எழுத்தறிவும், பெண்கள் 55 சதவிகிதம் பெண்கள் எழுத்தறிவும் பெற்றிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும், எங்களுடைய தளபதியார் அவர்களும், அந்த மாவட்டத்தின்மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்துங்கள் என்று ஆணையிட்டதன் அடிப்படையில், நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த மாவட்டத்திலே இன்றைக்கு பள்ளியிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுகின்ற அளவிற்கு செய்துகொண்டிருக்கின்ற அந்தச் சூழ்நிலையில், அந்த மறுமலர்ச்சியையொட்டி நம்முடைய மரியாதைக்குரிய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், நான் கேட்டிருக்கின்ற அந்த மூன்று மாணவர் விடுதிகளையும் தந்து உதவுவாரா என உங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலப்பட்டி, குருபரபள்ளி பகுதியிலுள்ள மேல்நிலைப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கையை எல்லாம் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசாங்கம் அவசியம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 21

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையைப் பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்கிற காரணத்தினால், சிறப்புக் கவனம் செலுத்தி, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, நன்றி சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

76—

குடமுழுக்கு

***62288—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, பழைமைவாய்ந்த கோட்டூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய நிதி ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கோட்டூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலில் சுவாமி சன்னதியின் கர்ப்பக் கிரக மண்டபம் மட்டும், ரூ.25,000/- மதிப்பீட்டில் கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணித் • திட்டத்தின்கீழ் திருப்பணி செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளைச் செய்திட, உத்தேசமாக ரூ.20 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியினைச் செய்திட, திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. திருப்பணிக்குப் பொதுமக்கள் நிதியுதவி வழங்கிட